★ விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

வரு 18 பங்குனி 20 ஞாயிறு 29 இதழ் 51
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-4-84

வேலைநிறுத்தம் நீடிக்கிறது

(புதுடில்லி)

இந்தியாவில் 17வது நாளாக தொடர்ந்து நடைபெறும் துறைமுகத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குகொண்டுவர அரசாங்கம் அத்தியவசியசேவைகளு சட்டத்தை கொண்டுவரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியகப்பல் துறை அமைச்சருக்கும் 4 தொழிற் சங்க சம்மேளனத்தலைவர்களுக்குமிடையில் கடைசியாக நடத்தப்பேச்சுக்களும் தோல்வியில் முடிந்தன

(8-ம் பக்கம் பார்க்க)

விரைவில் இடைத்தேர்தல்

(புதுடில்லி)

இந்தியாவில் 8 லோக்சபாத் தொகுதிகளுக்கும் 23 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் விரைவில் இடைத்தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

5 மாநிலங்களில் காலியாகவுள்ள லோக்சபாத் தொகுதிகளுக்கும் 18 மாநிலங்களில் காலியாகவுள்ள சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தலை நடத்தத் தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்துவருகிறது.

'பாட்டா' மாநாடு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

மலையகத் தமிழ் ஆசிரியர் பிரதானசங்கத்தின் [பாட்டா] 8வது வருடாந்த மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது. மாநாட்டின் ஞாயிறு பதி ஜே ஆர் ஜெயவர்த்தனா இன்று இரவு 7 மணிக்கு சனிப்பிரதான பூர்வமாக தொடக்கி வைப்பார்.

ஆயினும் மாநாட்டின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் உத்தியோகபூர்வ கூட்டம்

(8-ம் பக்கம் பார்க்க

6 லட்சம் தோட்ட தொழிலாளர்
இன்று முதல் வேலைநிறுத்தம்!

இ. தொ. காங்கிரஸ் மற்றும் 14 தொழிற்சங்கங்கள் கலந்துகொள்கின்றன

(கொழும்பு)

நியாயமான சம்பளக் கோரிக்கையை முன்வைத்து ஆறு லட்சம் தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் இன்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்குகின்றனர்.

வேலைநிறுத்தம் நேற்று ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று ஐக்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் பதினான்கு எதிரணித் தொழிற்சங்கங்கள் அறிவித்திருந்தபோதிலும்; நேற்று ஞாயிற்றுக்கிழமை எட்டு தரம் இன்று முதலே தோட்டத் தொழிலாளர்கள் முழுமனதுடன் குதிப்பார்கள் என்று இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர் நேற்று "சமநாடு"விடம் தெரிவித்தார்.

நியாயமான சம்பள உயர்வு ஆண்—பெண் ஊழியர்களுக்கு சமசம்பளம், பண்டிகை முற்பணமாக ஐநூறு ரூபா வழங்கப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளே தோட்டத் தொழிலாளர்களின் முக்கியமான கோரிக்கைகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகசபை நேற்றுக்காலை கொழும்பில் கூடி, வேலைநிறுத்தத்தை ஆரம்பிப்பதென்ற தனது முக்கியதீர்மானத்தை உறுதிப்படுத்தியது.

இ. தொ. காங்கிரஸுடன் தோட்டத் தொழிற்துறையைச் சேர்ந்த பதினான்கு எதிரணித் தொழிற்சங்கங்களும் இந்த வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளன.

இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர் நேற்று "சமநாடு" விடம் தெரிவித்தபோது, இ. தொ. காவில் மூன்று லட்சம் தோட்டத்தொழிலாளர்கள் உட்பட ஆறுலட்சம் தோட்டத்தொழிலாளர்கள் ஏப்ரல் மாதம் முதல் வேலைநிறுத்தம் செய்வார்கள் என்று கூறினார்.

ஐக்கிய தேசியகட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் வேலைநிறுத்தம் செய்யவில்லை.

மண் எண்ணைக்குப் பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மண்ணெண்ணைக்குப் பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் கடந்த இரு தினங்களாக, மண்ணெண்ணை வாங்க அலைந்து திரிகிறார்கள்.

நேற்றுக்காலை கலிதூரிலுள்ள எரிபொருள் நிலையத்தில் உள்ள எரிபொருள் நிலையத்தில் ஒருவருக்கு 5 லிட்டர் மண்ணெண்ணை வழங்கப்பட்டது.

பெருந்திரளானோர் 'பூ' வரிசையில் நின்று மண்ணெண்ணை வாங்கினார்கள். அந்த எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் பெறுவதற்கும் வாகனங்கள் நீண்ட கியூவில் நிற்பதைப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

கிடைக்கக் கூடியவாறு மண்

(8ம் பக்கம் பார்க்க

வதந்தி கக்கும் தொலைபேசிகள்!

(கொழும்பு)

வதந்திகளைப்பரப்பும் சில தொலைபேசி கண்ணி பொலிஸார் இப்பொழுது கண்டுபிடித்துள்ளனர்!

ஒரு சின்னவிஷயம் நடந்தாலும் அதனைப் பெரிதுபடுத்தி இனக்கலவரங்களைத் தூண்டும் அளவுக்கு இந்தத் தொலைபேசிகள் மிகவன்மையுடன் இயங்கி இருக்கிறதாம்!

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் நேற்று இதுபற்றி 'சமநாடு'க்குத் தகவல் தெரிவிக்கையில், கையும்மெய்யுமாக இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அகப்பட்டுள்ளன என்றும் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறினார்.

யார் இந்த இளம் பெண்?

(யாழ்ப்பாணம்)

நல்லூரிலுள்ள வீதியொன்றில் சுமார் 20 வயதான இளம் பெண்ணின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இளம்பெண்ணின் சடலம் யாழ் · பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு பிரேதச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. நேற்றுமாலைவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை. பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர். (ஈ)

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட

பாடசாலை மாணவர் வரவு அவசியம் பதியப்படவேண்டும்

வடமாகாண அதிபர்களுக்கு ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

18 வயதிற்கு மேற்பட்ட சகலமாணவர்களின் பாடசாலை வரவும் ஒழுங்காக இடாப்பு களில் பதிவுசெய்யப்படவேண்டுமென்று வடமாகாண அதிபர்களுக்கு கல்விப்பகுதியினரால் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

மாணவர் வரவு தொடர்பாகக் கடந்த வருடம் கல்விப் பகுதியும், பொலிஸ் பகுதியும் விடுத்த கற்றறிக்கைக்கு ஏற்ப வரக இந்த ஆலோசனை இப்பொழுது தெரிவிக்கப்பட்டுள்ளது

எந்த நேரத்திலும் கல்விப் பகுதியினர் அல்லது பொலிஸார் இடாப்பைச் சோதனை விடுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டதாக அதிபர் ஒருவர் கூறினார்.

8-ம் பக்கம் பார்க்க)

சுவீப் முடிவுகள்

148-வது மகாஜன சம்பத சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
01 M 0667
ரூ 2,95,800

இரண்டாவது பரிசு
03 L 0253
ரூ. 1,47,900

மூன்றாவது பரிசு
19 H 0077
ரூ. 49,300

ரூபா 838-10 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு!

06 A 0188	05 A 0656
17 A 0 54	19 A 0876
04 B 0998	06 B 0416
15 B 0070	19 B 0819
20 B 0868	01 C 0607
09 C 0613	12 C 0301
18 C 0449	17 C 0915
08 D 0809	03 D 0182
05 D 0140	
05 D 0183	14 D 0149
05 E 0680	12 E 0363
13 E 0296	14 E 0706

(8-ம் பக்கம் பார்க்க)

தனியார் விடுதிகளில் திடீர்ச் சோதனை

(கொழும்பு)

கொழும்பில் தனியார் விடுதிகள் திடீர் சோதனைக்குள்ளாகி வருகின்றன.

கடந்த வாரம் ஒரு தனியார் விடுதியில் தமிழ் இளைஞர்கள் பலர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

புறக்கோட்டையில் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மேற்படி தனியார் விடுதியில் தங்கியிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நியூஸிலாந்தில் அடுத்த 'பாட்டா' மகாநாடு

(கொழும்பு)

மலையகத் தமிழ் ஆசிரியர் பிரதானிகள் சங்கத்தின் (பாட்டா) அடுத்த மகாநாடு நியூஸிலாந்தில் ஒக்லண்ட் நகரில் [illegible] நடைபெறுமென [illegible] கூறப்பட்டது. (இ-வெ)

ஒரு நாள் கிரிக்கெட் நியூஸிலாந்து வெற்றி

(கொழும்பு)

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையே கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட்போட்டியில் நியூஸிலாந்து வெற்றிபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 44 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்களை எடுத்தது வரலாறு

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

மாணவர் தேர்ச்சிகுறிக்கை, புகழிலிபரத்தாள், மதிப்பீட்டுப்படிவம், வசதிகள் சேவைகள் கட்டணப் பேரேடு, க. பொ. த. (உயர்தரம்) விஞ்ஞான செய்முறை ஆசிரியர் பதிவேடு விற்பனைக்கு உண்டு. செட்டியார் ஆச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (1689)

கலர் தீராத்தி 4X3 ரூபா 10/- நிலை ரூபா 12/- மற்றும் பல ரகங்களில் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: 14/1, பிளெச்சிங் லேன், கண்டிக்குளி யாழ்ப்பாணம். (1686)

சாவகச்சேரி பொலிஸ் ஸ்ரேசன் வீதிக்கு அருகாமையில் உள்ள மொத்தம் 40 பரப்புக் காணி 18 துண்டுகளாக அகலமான ஒழுங்கை வசதிகளுடன் பிரிக்கப்பட்டு விற்பனைக்குண்டு இக் காணி சாவகச்சேரி பஸ்நிலையத்திலிருந்து ½ கல் தூரத்திற்குள் அமைந்துள்ளது தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: செ. ஆம்பிகைபாலன், ஜே.பி. யூ.எம். இல 9, கண்டி வீதி, சாவகச்சேரி. தொலைபேசி 262 அல்லது வ. அருளரீசலம், "அன்னவாசம்" 804 கிழக்கு மிற்றர் கட்டை, கண்டி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (1658)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு முன்பாக, குமாரகோவில் வீதியில் 4½ பரப்புள்ள காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- V. கமலநாதன் 451, காங்கேசன்துறை வீதி, மாவிட்டபுரம். 1676

சரசாலை வடக்கு கல்லுவம் பகுதி மாத்தளாய்க்கோடு 66 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. நல்ல செம்மண் நிலம். எல்லைகளையும் கொண்டது. தொடர்பு: கி. வைரவிப்பிள்ளை, சரஸ்வதி வித்தியாலயம், சரசாலை, சாவகச்சேரி 1692

ஆனைக்கோட்டை 3-ம் கண்டை மானிப்பாய் வீதியில் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு நேரடியாக தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு S. மார்க்கண்டு 399, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1699

விற்பனைக்கு

Bairaha Farm கோழிக் குஞ்சுகள் 2, 9, 16, 28 திகதிகளிலும் புறொயிலர் குஞ்சுகள் வியாழக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் ந. சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 1700

புதிய தஞ்சாவூர் வீணை விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க: திருமதி P. இராசரத்தினம் விடேசன் ஒழுங்கை சாவகச்சேரி. 1703

நாரந்தனை வடக்கு இருதய ஆண்டவர் கோவிலுக்கு முன்னால் செல்லும் ஈச்சம்புல வீதியில் 6 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு: ச. வ. பிற்றர் பிள்ளை, பள்ளிவீதி, நாரந்தனை, ஊர்காவற்றுறை. 1687

விற்பனைக்கு

ராஜ வீதியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு பார்த்து விலை பேசும் பழைய சந்தைக்கு மிடையில் தொடர்பு: க. சோமநாதன், அன்னை இல்லம் ராஜ வீதி, திருநெல்வேலி, 1710

தேவை

கோழிப் பண்ணையை பராமரிப்பதற்கு 10 - 14 வயதுள்ள மனைவி அதிகாரமாக வந்தோர் முகாம் அடையுடன் நேரில் வரவும். ந. ஈஸ்வரராசா, பிரம்படி, கொக்குவில். 1701

வாடகைக்கு

யாழ்ப்பாணம் கிளாக்கடைக்கு அண்மையில் மொத்த விலைபார்க் செய்யக் கூடிய பெரிய கடை வாடகைக்குண்டு S. ராசரத்தினம், 61, பாரதி வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1706

டீபக் PL-4 லேத் மெசின்
3&4 ஜோ சக்டென்
விற்பனைக்குண்டு
பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1694

வருடமொன்றுக்கு உங்கள் பணத்துக்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள். குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (ரூபா 1000/-) எந்நேரமும் அறிவித்தலின் பின் முழுப்பணத்தையும் திருப்பிப்பெறலாம்.
விபரங்களுக்கு:-
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல் மாடி)
யாழ்ப்பாணம், போன்: 23698

முஸ்லீம் விற்பனைப் பிரதிநிதி
தேவை
SALES REPRESENTATIVE)
வெளி மாவட்டங்களில் வேலைசெய்வதற்கு மூன்று பாஷையும் தெரிந்த, மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ள முஸ்லீம் விற்பனைப் பிரதிநிதி உடனடியாகத் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி. (1705)

புதிய கல்வி ஆண்டுக்கான
மாணவர் தெரிவு 84/85
கைவினைஞர் பயிற்சி நெறிகள் (CRAFT COURSES)

1. உலோக ஒட்டுனர் பயிற்சி (WELDING PRACTICE)
2. உலோக வார்ப்புனர் பயிற்சி FOUNDRY PRACTICE)

தொழில் நுட்பத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். G. C. E. (சாத.) வரை கல்வி கற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சி நெறிகள் தமிழ் மூலம் நடாத்தப்படும்; ஆங்கிலம், பொறிமுறை வரைதல் முதலான பாடங்களுடன் குறித்த பயிற்சி நெறியின் போதனையும் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படும்.

பயிற்சிக்காலம் — 1 வருடம்

பயிற்சி நெறி	கல்வி	வைப்புப்பணம்
1. உலோக ஒட்டுனர் பயிற்சி	ரூ. 500-00	1,000-00
2. உலோக வார்ப்புனர் பயிற்சி	ரூ. 500-00	500-00

நிரவன அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று (3/-) பூர்த்திசெய்து,

THE DIRECTOR,
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
VADDUKODDAI.

என்ற முகவரிக்கு 23-04-1984க்கு முன் அனுப்பி வைக்கவும். (1698)

பேக்கறி வேலையாட்கள்
உடன் தேவை
பேக்கறி வேலையில் அனுபவம் வாய்ந்தவர்கள் நேரில் வரவும். திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்
விக்ன விநாயகர் பேக் ஹவுஸ்
கற்பகப் பிள்ளையார் கோவிலடி, இருபாலை 1711

உ
சிவமயம்
நகுலேஸ்வரம், கிரிமலை
அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஆலய
தேவி மகோற்சவ விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

நிகழும் ருதிரோத்காரி ஞு பங்குனி மீ 21-ந் திகதி 3 4-84 செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் வரும் சுபவேளையில் அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவிக்கு கொடியேற்ற வைபவத்துடன் உற்சவம் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறும்.

13-4-84 வெள்ளிக்கிழமை
பி. ப. 2 மணிக்கு இரதோற்சவமும்
14-4-84 சனிக்கிழமை காலை
தீர்த்தோற்சவமும் நடைபெறத்
திருவருள் பாலித்துள்ளது

மேற்படி உற்சவகாலத்தில் அனைவரும் விரதமனுஷ்டித்து இராசசிவராக வந்து அம்பாளைத் தரிசித்து பூர்ண கிருபாகடாக்ஷத்தைப் பெற்றுய் வீர்களாக

இங்ஙனம்
கு. நகுலேஸ்வரக்குருக்கள்
நகுலேஸ்வர ஆதீன
நகுலேஸ்வரம், கிரிமலை 1696

அறிவித்தல்

வடமாகாணம் கூற்றெழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது மண்டைதீவு மீன் தூள் ஆலையில் நேரடியாக விநியோகிக்கப்படும் காரல் மீனுக்குப் பின் வரும் விலைகள் கொடுத்து வாங்கத் தீர்மானித்துள்ளது:

பகல் கடல் காரல் மீன் — ரூபா 2/- கிலோ
இரவு கடல் காரல் மீன் — ரூபா 1/40 ”
சாளை (கருட்டை மீன்) — ரூபா 1/10 ”

விநியோகிக்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
வ. மா. க. தொ. கூ. ச. சமாசம்,
25, முன் வீதி, யாழ்ப்பாணம்.
(1697)

(2-ம் ஆண்டு) (1-ம் ஆண்டு)

நினைவஞ்சலி

க. நடராசா அவர்கள்
திருமதி ந. மகேஸ்வரி

பண்பாக உயர்ந்த அன்பு பாசத்தால் இணைந்த எம்மைவெல்லாம் அரவணைத்த எங்கள் அன்புத் தெய்வங்காள்! எமது உள்ளமெலாம் நிறைந்திருந்தும், உங்கள் உயிர் உடலைவிட்டு அகன்றபோதும் நீங்கள் ஏற்றி வைத்த பாசஒளி எங்கள் உள்ளங்களில் என்றும் நிறைந்துள்ளதே! உங்கள் ஆத்மா சாந்தியடைய நித்தமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரியமுள்ள
மருமகன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
89, அத்தியடி புத வீதி, யாழ்ப்பாணம் 1690

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய - சோவியத் விண்வெளிவீரர்கள்

நாளை பயணமாகிறார்கள்!

புதுடில்லி, ஏப். 1

சோவியத் - இந்திய விண்வெளி வீரர்களின் கூட்டு விண்வெளிப் பயணம் ஏப்ரல் 3-ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டது.

இப்பயணத்திற்கான 'ராக்கெட்' அது செலுத்தப்படவிருக்கும் உந்து தளத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது கிடைமட்டமாக வைக்கப்பட்டிருக்கும் இந்த ராக்கெட் இன்று செங்குத்தாக நிமிர்த்தப்படும் என்று கூறப்பட்டது. இறுதிநேர ஆராய்ச்சிகளும் பரவும் பெருமளவிலும் பூர்த்தி யடைந்துள்ளன. இந்திய, சோவியத் விஞ்ஞானிகள் இவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

சோவியத் - இந்திய கூட்டு விண்வெளிப் பயணத்துக்கு இந்திய வீரர்கள் இருவரும் பூரண தகுதி நிலையில் உள்ளனர் ராகேஷ்சர்மா, ரவிஷ் மல்ஹோத்ரா ஆகிய இருவுமே இவ்விரு வீரர்களுமாவர். இவர்கள் இந்திய விமானப் படையில் விமானிகளாகப் பணி புரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

விண்வெளிப் பயணத்துக்கு இவ்விரு இந்தியர்களும் தகாரராக இருக்கின்றபோதிலும் இவர்களில் ஒருவரே பயணத்தை மேற்கொள்வார். அவர் யாரென்று இதுவரை அறிவிக்கப்படவில்லை. ஏனெனில் இறுதி நேரத்தில் இவர்களில் யாராவது சிறிதளவேனும் சுகவீனமடைந்தால் அவர் பயணத்தை மேற்கொள்ள மாட்டார்.

மாஸ்கோவுக்கு அருகிலுள்ள ஸிவ்யோத்ஸினி நகரில் யூரி காரரின் விண்வெளிப் பயிற்சி நிலையத்தில் விண்வெளிப் பயணத்திற்கான பயிற்சியை இந்திய வீரர்கள் பெற்றனர்.

விண்வெளிப் பயணத்திற்கான உடை அணிவது முதல் விண்கலத்தை இயக்குவது, விண்வெளியில் இருக்கும் போது உணவுண்பது, உடலைச் சுத்தம்செய்வது போன்ற பயிற்சிகள் யாவும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன

விண்வெளிப் பயணத்தை முடித்துக்கொண்டு பூமி திரும்பியதும் கடலில் குதித்துத் தரை சேருவதற்கான பயிற்சியும் இவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்திய, சோவியத் விண்வெளி ஆராய்ச்சியாளர்களும் மற்றும் விண்வெளிப் பயண அவதானிகளும் இப்பயணத்தை ஆர்வத்துடன் எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றனர்.

புரவிகளைப்பூட்டி தேரைச் செலுத்திச் செல்லும் சூரிய பகவானின் உருவம் இப்பயணத்தின் சின்னமாக அமைக்கப்பட்டுள்ளது இச்சின்னம் கறுப்பு சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது

விண்வெளியில் இந்திய-சோவியத் வீரர்கள் 11 தினங்கள் பயணஞ் செய்வர். 12 ஆராய்ச்சிகளை மேற்கொள்வர். (கி)

"ஜெருசலத்தில் இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களை சேதமாக்க வேண்டாம்"

யாஸீர் அரபாத் கோரிக்கை

ஐ.நா., ஏப் 1

ஜெருசலத்திலுள்ள இஸ்லாமியப் புனித ஸ்தலங்களைக் களைக்கப்படுதல் அனுமதிக்க வேண்டாமெனப் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் ஐ.நா. விடம் கேட்டுள்ளார்.

ஜெருசலம் நகரி இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இப்பகுதியில் இஸ்லாமியர்களது வழிபாட்டுத் தளங்களையும், புனிதப் பிரதேசங்களையும் இஸ்ரேலிய இராணுவம் கண்காணித்துவருவதாகக் கூறப்படுகின்றது. இதனைத் தொடர்ந்தே பாலஸ்தீன இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் மேற்கண்டவாறு ஐ.நா. விடம் முறையிட்டுள்ளார்.

ஜெருசலத்தில் இஸ்லாமிய வழிபாட்டுத் தலமொன்றில் படிக்கட்டுகள் பேரிடியளவு பராமரிப்பின்மையால் சேதமாக்கப்பட்டுள்ளதெனவும், இதுபோன்ற வேறு பல தலங்களும் சேதமடையும் நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (கி)

பிரிட்டிஷ் விளையாட்டு அணியின் தென்னாபிரிக்கப் பயணம்!

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் கண்டனம்

லண்டன், ஏப். 1

பிரிட்டனின் 'ரக்பி' விளையாட்டு அணியொன்று தென்னாபிரிக்கா செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது இப்பயணத்தை ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் ஆட்சேபித்துள்ளது.

தென்னாபிரிக்கா இன ஒடுக்கல் கொள்கையைத் தீவிரமாக அமுல்படுத்தப்படும் ஒரு நாடு. இங்கு பிரிட்டனின் ரக்பி விளையாட்டு அணி செல்வது வருத்தத்தை அளிக்கிறது பிரிட்டன் ஐ.நா.வின் இன ஒடுக்கல் கொள்கைகளுக்கு எதிரான முடிவுகளை அனுசரித்து இவ்விளையாட்டு அணியின் பயணத்தை ரத்துச் செய்யவேண்டும் என்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் அடிஸ் அபாபாவிலிருந்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது (கி)

உலக இந்து சமூகத்தை வலுப்படுத்த சர்வதேச இந்து இளைஞர் சங்கம்!

உலக இந்து சமூகத்தின் வளர்ச்சிக்கெனவும் இந்து நாகரிகத்தைப் பலப்படுத்தவுமென சர்வதேச இந்து இளைஞர் சங்கம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. International Hindu Youth Association).

உலகின் சகல பகுதிகளிலும் பரந்து வாழும் இந்து இளைஞர்களை அவர்களின் சமய, நாகரிக பாரம்பரியங்களின் அடிப்படையில் ஒன்றிணைந்து இயங்குவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். 1981ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

அரபெக், இனப்பாகுபாடு அகன்ற அமைதி, உண்மை, நீதி ஆகியவற்றை நிலைநிறுத்தும் உலகமொன்றை உருவாக்குவது சர்வதேச இந்து இளைஞர் சங்கத்தின் பிரதான இலக்காகும். இச்சங்கத்தின் தலைமையகம் கொழும்பில் இயங்குகின்றது. இதன் கிளையொன்று தமிழ்நாடு சென்னையிலும் செயல்படுகின்றது.

நோக்கங்கள்

★ இந்து இளைஞர்களை மதியில் தகவல் பரிமாற்ற அமைப்பொன்றை உருவாக்குவது.

★ உலகில் வாழிடப்படுகின்ற ஏனைய நாழ்ந்தநிலையிலுள்ள இந்து மதத்தவருக்கு ஆதரவளித்து உதவுவது.

பாலைப் போதனைகளில் அடைத்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் பாலர் தேவைகளைப் பூர்த்திசெய்வது இப்பணியின் முக்கிய பணியாக இருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் செங்கலடி வடக்கில் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் பெருமளவு மேய்ச்சல் நிலங்களை மேற்குறிப்பிட்ட காலநடைப் பண்ணைத் திட்டத்தக்குப் பெற்றுக்கொள்ள நோக்கமாகவுள்ளதாகவும் நடைபெறும் அதேவேளை பாலைப் போதனையில் அடைக்கவும் குளிராக்கவும் கூடிய இயந்திரங்களைப் பெறவும் பேரம்பேசப்படுகின்றது.

கிளிநொச்சி, செங்கலடிப் பகுதிகளில் ஈராயிரம் ஒரு லட்சம் பசுக்களும் எருமைகளும் காணப்படுகின்றன. ஆனால் இவற்றினால் கிடைக்கும் பயன்

சீக்கியர்கள் பிரச்னைகள் சம்பந்தமாக அரசியலமைப்பு மறு பரிசீலனை!

உள்துறை அமைச்சர் சேத்தி தகவல்!!

அகாலிதள் தீவிரவாதிகள் மகிழ்ச்சி

புதுடில்லி, ஏப் 1.

இந்திய அரசாங்கம் பஞ்சாபில் அகாலிதளங்களின் பிரச்னைகள் சம்பந்தமாக இந்திய அரசியல் அமைப்பை மறு பரிசீலனை செய்யவுள்ளது இத்தகவலை இந்திய மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு பி. ஸி சேத்தி வெளியிட்டார்.

இந்திய மத்திய அரசாங்கம் இம்முடிவை எடுத்திருப்பதை பஞ்சாப்பிலுள்ள அகாலிதள்கள் வரவேற்றுள்ளனர். அகாலிதள் இயக்கத்தலைவர் ஹர்சரண் சிங்லோங்கோவால் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை பஞ்சாப் மாநிலத்தில் இந்திய அரசியல் அமைப்பின் பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தி கதிக் பஞ்சாப் சீக்கியர்களுக்கெதிராகவுள்ள எதிர்ப்புத் தெரிவித்த தீவிரவாத சீக்கியர்கள் தீர்மானித்திருந்தனர். மத்திய அரசு அரசியலமைப்பை மறுபரிசீலனை செய்யப்போவதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து இந்தஎதிர்ப்பைக் கைவிடத் தீவிரவாத சீக்கியர்கள் முடிவு செய்தனர்.

அரசியல் அமைப்பின் இருபத்தைந்தாவது ஷரத்தில் பஞ்சாப்பில் பெரும்பான்மை இந்துக்களுக்கு கடுமை சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதாக அகாலிதள்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜ்யசபைத் தேர்தல்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை இந்திய ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸ் பெற்றுள்ளது இப்பலம் இந்திய அரசியல் அமைப்பின் திருத்தங்களை கொண்டுவர உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (கி)

பாரிய திட்டங்களை அமைக்கவும் ஏற்பாடு

★ இந்துமதம் பற்றிய புதிய ஆராய்ச்சியொன்றை அம்மதத்தின் வரலாறு, கலாச்சாரம், நாகரிகம் ஆகிய துறைகளில் மேற்கொள்வது.

★ கல்வி, தொழில், வைத்தொழில்கள் என்பவற்றை உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள அவ்வப்பகுதி இந்துக்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பிப்பது.

★ மனித சமுதாயத்தை ஒரு குலமாக கிளர்ந்தெழ பிரசாரங்களைச் செய்வது.

★ மனிதத்தன்மையை உயர்த்துவதன்பேரில் சமூக சேவைகளில் ஈடுபடுவது

இலங்கையில் இரு பிரதான பயன்தரும் திட்டங்களை விரைவில் ஆரம்பிக்க இச்சங்கம் முடிவுசெய்துள்ளது ஐக்கிய தேசிய அபிவிருத்தி கூட்டுறவு என்ற இச்சங்கத்தின் ஒருதுணை அமைப்பே இத் திட்டங்களை மேற்கொள்ளும் இந்த அமைப்பு சாதகேசரிதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தவென உருவாக்கப்பட்டதாகும்.

பெரியளவில் காணிநடைப் பண்ணையொன்றை அமைப்பது இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ள இரு பிரதான திட்டங்களில் ஒன்றாகும். மிகவும் குறைவு தரம் குறைந்த காணிநடை இனம், தகுந்த உணவுஇன்மை, வைத்தியவசதிகள் போதாமை ஆகியவையே இதற்குக்காரணமாகும். இவை யாவும் சீராக்கப்பட்டால் மிக உயர்வான பலனை இக்காணிநடைகள் மூலம் பெறமுடியும்.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி இரண்டாவது பெரும் திட்டமாகும். கிராமிய அபிவிருத்தி, காணிநடை வளர்ப்பு. விலங்குணவுத்தயாரிப்பு, பயிர்ச்செய்கை, மீன்பிடி சிறிய கைத்தொழில் மூலப் பொருள் தொழிற்சாலைகள், தரத்தில் உணவு பதனிடல் உணவுத் தயாரிப்பு ஆகிய தொழில் நடவடிக்கைகள் இத்திட்டத்தில் அடங்குகின்றன.

வாழ்ப்பாணத்தில் அதிநவீன வசதிகளுடன் கூடிய வைத்திய சாலையொன்றை அமைப்பதுவும் சர்வதேச இந்து இளைஞர் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும் இதற்கான ஆரம்ப மதிப்பீடு வேலைகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டன தற்போது நிபுணர்குழுவொன்றின் பரிசீலனையின் கீழ் இவ்விடயம் இருக்கின்றது.

இவ் வைத்திய சாலையை

(7ம் பக்கம் பார்க்க)

★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்

சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும்
பிரயாண ஒழுங்குகளுக்கும்

AIR-TRANSIT

TRAVEL CONSULTANTS

99-2/56 B, கபூர் பில்டிங்
2-வது மாடி கொழும்பு-1.
போன்: 549865

538 B, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 21603

(1684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

— பழைய வாசகம்

நமது நோக்கு

ஒடுக்கப்படும் இனம்?

"இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் செய்திருப்பதைப் போல வேறு எந்த இந்திய சமூகத்தினரும் அவ்வளவு செய்திருக்க மாட்டார்கள். எனவே எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்க தமிழ்ப் புத்தகங்களை நான் சரியாகப் படித்தாகவேண்டும்" என்று தமது தென் ஆபிரிக்கா போராட்டத்தையிட்டு இவ்வாறு கூறியவர் மகாத்மா காந்தி.

மீண்டும் அவர் கூறியது: "தமிழ் வளர்ச்சிதரும் இனிய மொழி. இந்தியா ஒரே தேசிய இனமாக இருக்க வேண்டுமானால் சென்னை மாகாணத்திற்கு வெளியில் இருப்பவர்கள் தமிழைக் கற்றுத் தெரிந்திருக்கவேண்டும்."

இந்தியா சுதந்திரமடையும் காலத்தில் - குறிப்பாக 1945ல் கூடிய முதலாவது ஐ. நா. மாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதியாக அனுப்பி வைத்த திருமதி விஜயலக்ஷ்மி பண்டிற் அவர்களுக்கு மகாத்மா அளித்த அறிவுரை; "தென் ஆபிரிக்காவில் இந்தியர் கறுப்பர்கள் அனுபவிக்கும் அட்டூழியங்களுக்கு முடிவு கொடுக்கும் நிறைமை உமக்கே உண்டு; அப்படியே செய்யுங்கள்" என்றார்.

திருமதி விஜயலக்ஷ்மியின் பிரேரணை ஆதிய நாடுகளின் ஆதரவுடன் வெற்றி கண்ட வேளையும், தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் (Apartheid) என்ற கடுமை உருவம் அதன்பின் தான்டவ மாடிவருவதை நாமறிவோம்.

இந்தவகை இனஒதுக்கல் எங்கு தலைவிரித்தாடுகின்றதோ அங்கெல்லாம் ஐ.நா. குரல்கொடுக்கவேண்டுமென்ற கருத்து இந்தியப் பிரதமர் இந்திராவின் இரத்தத்தில் ஒடுகின்றது. பி. எல். ஓ தலைவர் உதாரணம்.

அமெரிக்க ஆயுதமோ ரஷ்ய ராஜதந்திரமோ இந்திராவின் இக்கொள்கைக்கு ஈடுகொடுக்கமாட்டா தென்பது உலக விடயங்களில் சமநோக்குடன் அணுகும் ஆற்றல் உடையவர்களுக்கு நன்கு புலப்படும்.

இன்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் இவ்வித இன ஒதுக்கலுக்குப் பலியாகின்றனர் என்பது மிகைப்படுத்தப்பட்ட கற்றெனவாகும். தமிழ் மக்கள் பழுத்துயர் பெரிதென்றாலும் ஒடுக்கப்பட்ட, ஒடுக்கப்படக்கூடிய மக்கள் அல்ல என்பது தெளிவு.

போரிய திறமையும் பயிற்சியும் அற்ற ராணுவம் இரண்டாவது தடவை அப்பாவி மக்களைக் கொன்றதும் காயப்படுத்தியதும், கடந்த ரெஸ்ற் கிறிக்கட் ஆட்டத்தில் அடைந்த இன்னிங்ஸ் தோல்வி போல் சந்தையில் கண்ட கஷ்டத்துக்குஞ்சி நடந்த 'வீரச்' செயல்களே. இத்தகைய தேசிய பற்றோடு நாட்டை எவ்வாறு பாதிக்கு மென்பதை உணர இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

தமிழர் உரிமை இழந்த வாழும் நிலைமை உண்மை; அதற்காக 36 வருடங்களாகப் போராடுவதும் உண்மை. அப்போரிலே வெற்றியாணாத கட்டத்தில் தமிழ் இளைஞர் எதிர்ப்பு இன்றைய நிலையை உருவாக்கியுள்ளது.

ஆனால் இன்று வாழும் தமிழர் இன்றோ என்றோ ஒடுக்கப்படக்கூடியவரி அல்லர் என்பது கடந்தகால, நிகழ்கால, வருங்கால மாயிய மூன்று காலங்களுக்கும் பொருந்தமான உண்மையாகும்.

இந்த உண்மையை இங்குள்ள தலைவர்கள் முற்றாக உணர முடியாத போதும் இந்தியப் பிரதமர் அறிந்திருக்க வரலாற்றுத் தொடர்பான மரபு அந்நாட்டுக் உண்டு.

இவ்விரு நாடுகளும் நல்புடன் வாழ்வது என்றும் நன்றெனபது இந்தியாவின் கொள்கை. எனவே இலங்கை அரசு இன்று கோபாக்கினியில் குதித்தெழுந்ததால் அதனைத் தணிக்கும் பெருந்தன்மை காரணமாக இந்நாட்டுத் தமிழ் மக்களின் கதியை இவ்வாறு வர்ணித்திருக்கின்றார் இந்திரா.

"தனித்துவமாக வாழ வல்ல இலங்கைத் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசு எவ்வளவும் இடம்கொடுக்க விரும்பவே; ஒரு நாடாக இருந்தாலும், தமிழர்கள் முட்டாளல்லாமல் வாழ்வு எமக்கு அவசியம்" என்பதை நீண்ட காலமாகச் சொல்லிவந்தவர் காலஞ்சென்ற கோப்பாய் எம். பி. ம. சதிரவேலுப்பிள்ளை அவர்கள்.

இதனை விளங்கிய உலக அரசியல் தலைவர் இந்திராவே என்று தமது கடைசிப் பயணத்தைப் புதுடில்லிக்கு மேற்கொண்டிருந்தமை நாமறிவோம்.

இன்றைய தமிழ்த் தலைவர்கள் அந்த உண்மையைப் பின்பற்றியது மறைந்ததலைவருக்கு ஆவரின் முன்றாவது நினைந்த தினத்தில் வெளிவளிக்கின்றது.

அது அவ்வாறாக, அவருடைய உறுதிகொண்ட நம்பிக்கை தமிழ் மக்களின் அழியாப் பெருமையிலும் ஆண்மையிலும் தங்கியிருக்கிறதென்பதை நாமனைவரும் நினைவிற் கொள்ளுக் அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

வாக்குரிமைக்கும் புறம்கொடாத வாரிசிலே புகுவட்டு இறந்த மகாத்மாவை வெளிவைக்கண்ட நியாயம், பெற்றபோதிலும் பெரிய தோர் இன்பமடைந்த தாய் பற்றிய பண்டைய இலக்கியம் கூறுகிறது. கணவனை இழந்தபோது, நமையனை அனுப்பி, நமையனை இழந்த போது ஒடுமபத்தில் ஒரே ஒரு பையனை அனுப்பிய வீர மங்கையைப்பற்றி அறியாத தமிழர் எங்குமுண்டா?

கல்வியிலும் வீரத்திலும் புகழ்பெற்ற தமிழினத்தவரைக் காக்கத்தக் கட்டெதிரிய போர் எவரும் அழித்தவிட முடியாது.

எந்தும் எவராலும் அடக்கி ஒடுக்க முடியாத தமிழ் மக்கள் இலங்கை தேசிய பற்றோடுபிறக்கு இன்றியமையாத சமூகம் என்ற ஞானம் பிறக்கும் வரை இந்நாடு முன்னேறாது.

இன்று ஆரம்பமாகும் 'பாட்டா' மாநாடு:

உல்லாச பயணிகளின் வருகை சகஜநிலைக்கு திரும்புமா?

குஹன்

உலகில் உல்லாச புரிகளில் ஒன்றாக கருதப்படுவதை நமது நாடு உலகில் இரண்டாவது 'அழகாபுரி' என்று ஆங்கிலமயில் அலங்கார் ஒருவரும் வர்ணித்திருந்தார்.

தெக்கிழக்காசியாவில் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய முக்கிய இடமாகக் கருதப்படும் நமது நாட்டுக்கு, வருமானத்தை அள்ளிக்கொடுக்கும் முக்கிய அம்சமாக உல்லாசப்பயணத்துறை விளங்கி வருகிறது. வெளிநாட்டு நாணயச் சம்பாதியத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கும் இத்தொழிலில் ஏராளமான முதலீடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ஆடிக்கலவரம் உல்லாசப் பயணத்துறையை வெகுவாகப்பாதித்துவிட்டதுடன் பலகோடி ரூபா நஷ்டத்தையும் ஏற்படுத்தி விட்டது. உல்லாசப் பயணத்துறையில் மீண்டும் சகஜநிலையை ஏற்படுத்த அரசாங்கம் பகீரதபிரயத்தனம் செய்துவரும் அதேவேளையில் பெருமளவு பொருட்செலவையும் செய்துவருகிறது

கொழும்பில் இன்று ஆரம்பமாகும் பசுபிக்பிராந்திய உல்லாசப்பிரயாண சங்கத்தின் (PATA) முப்பத்திமூன்றாவது வருடாந்த மாநாட்டை 'கோலாகலமாக' நடத்தி வீழ்ச்சியுற்றிருக்கும் இத்துறையை கட்டி எழுப்ப அரசாங்கம் முயற்சிசெய்கிறது.

'பாட்டா' என அழைக்கப்படும் இந்நிறுவனம் 1951-ம் ஆண்டு ஹவாய் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 64 நாடுகளின் விமானசேவை நிறுவனங்கள், ஹோட்டல்கள், பிரயாண முகவர் நிலையங்களைச் சேர்ந்த 2114 நிறுவனங்கள் இச்சங்கத்தில் தற்போது அங்கம் வகிக்கின்றனர். சாம்பிராண் ஸ்கோவில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் இந்நிறுவனத்தின் கிழக்காசிய பிரதேச நிலையம் புதுடில்லியில் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

ஆசிய, பசுபிக்பிராந்திய உல்லாசப் பிரயாணத்துறை குறித்து பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்படவுள்ள இம்மாநாட்டில் 1400 பிரதிநிதிகள் தத்தமது மனைவிமாருடன் வந்து கொள்கின்றனர். இம்மாதம் 6-ம் திகதி வரை நடைபெறவுள்ள இம்மாநாட்டின் இன்றைய ஆரம்பநிழ்ச்சிகளில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, ராஜாங்க

விமானசேவை நிறுவனங்கள், ஹோட்டல்கள், பிரயாண முகவர் நிலையங்களைச் சேர்ந்த 2114 நிறுவனங்கள் இச்சங்கத்தில் தற்போது அங்கம் வகிக்கின்றனர். சாம்பிராண் ஸ்கோவில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் இந்நிறுவனத்தின் கிழக்காசிய பிரதேச நிலையம் புதுடில்லியில் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

ஆசிய, பசுபிக்பிராந்திய உல்லாசப் பிரயாணத்துறை வளர்ச்சி, எதிர்காலம் அமைச்சர் வாரிதி ஆனந்த நிஸ்ஸிடி அக்கிஸ் ஆகியோர் வந்து கொள்கின்றனர் பெற்றோட்ட, அகுங்கல்ல நீர்கொழும்பு, கல்கிசை ஆகிய இடங்களிலும் மாநாட்டு நிழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. கலாசாரநிழ்ச்சிகள், பொருட்காட்சி எல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

உல்லாசப்பயணிகளை நற்பி போட்டிபோட்டு நகரிக் தோறும் ஹோட்டல்கள் ஆடிக்கலவரத்தால் ஆட்டம் (5-ம் பக்கம் பார்க்க)

வீடமைப்புக் கடன்பெற ஒரு புதிய நிறுவனம்

பொதுமக்கள் புதிதாக வீடுகட்டுவதற்கு அல்லது வீட்டைத்திருத்துவதற்கு கடன் வழங்கும் விதத்தில் வீடமைப்பு அபிவிருத்திநிதிக் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுத்தாபனத்தில் பணம் வைப்புச்செய்து உறுப்பினராகிறவர்கள் வீடமைப்புக் கடன்களை இலகுவில் பெற்றுக்கொள்ளமுடியும்.

மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஒரு தனித்துவமான புதிய நிறுவனம் உள்ளூராட்சி வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சினால் விசேடமாக உருவாக்கப்பட்டது. முழுக்க முழுக்க வீடமைப்புக்கென நிதி வழங்கும் வேலையைக் கவனிக்கும் ஒரே ஒரு தாபனம் இதுவாகும். வீடமைப்பு தொடர்பான சேமிப்பு வைப்புக்களுக்கு வசதியையும் வீடு சொந்தமாக அமைக்க விரும்புவோருக்கு நிதியுதவியும் வழங்கும் ஒரேஒரு தாபனமும் இதுவாகும்.

ஒருவர் இக்கூட்டுத்தாபனத்தில் 'சந்தாப் பங்குதாரராக' சேர்வதன் மூலம் வீ. அ. நி. கூ. நிதி சேவைகளைப் பெறுவதற்கு அருகதை உடையவராகலாம். ஒருவர் சிலாலத்திற்கு தனது சொந்த சேமிப்பைச் செய்து அதனை வீ.அ.நி.கூ. நிதி சந்தாப் பங்குகளை நிரந்தரமாக வாங்குவதற்கு முதலீடு செய்வது என்பதுதான் இதன்சாராரணமாக கருத்தாகும். (வாரந்தம் ஒருவர் எவ்வளவு பணம் செலுத்தமுடியும் என்பதைப் பொறுத்து இந்தப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூபா 500/- ஆக மதிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் ஆகக் குறைந்த தவணைப்பணமாக மாதாந்தம் ரூபா 50/. செலுத்தி பங்குகளை வாங்கலாம்.)

எவ்வளவு தொகை பணம் முதலீடு செய்தாலும் ஒவ்வொரு 500/- ரூபா பங்கும் ஆண்டொன்றுக்கு 9 வீதம் ஒழுங்கான வட்டியை உழைக்கும் தேவை ஏற்படும்போது பணவைப்பாளர் தனது பங்கை வீ. அ. நி. கூட்டுத்தாபனத்திற்கு விற்று பணத்தை வட்டியுடன் பெற்றுக்கொள்ளலாம். இதுஒரு மாதத்திற்குட்பட்ட அறிவித்தலுடன் செய்யலாம்.

ஒருவர் தனது வீட்டைக் கட்டுவதற்கு அல்லது வாங்குவதற்குத் தேவைப்படும் மேலதிக பணத்தைப் பொறுத்தே ஒருவருக்குத் தேவையான பங்குகளின் எண்ணிக்கை இருக்கும். ஒருவரின் சந்தாப் பங்குத் தொகையான ஒவ்வொரு 500/ ரூபாவுக்கும். வீ. அ. நி. கூ. ரூபா 2,500/- வரை மதிப்பான பணத்தை வழங்கமுன்வரும். இப்படியே கூடுதலான எண்ணிக்கைகளைக் கொண்ட பங்குகளை ஒருவர் வைத்திருந்தால் கூடுதலான கடன் தொகைக்கு விண்ணப்பிக்க அவர் தகுதியுடையவராவார். (5-ம் பக்கம் பார்க்க)

கந்தபுராண உற்பத்திகாண்ட வெளியீடு

துணிவும் பண்பும் மிக்க செயல்

கந்தபுராணம் ஒன்று தேவை. உரையுடன் கிடைக்குமா? மூலமாவது கிடைத்தாலும் பரவாயில்லை. என்போர் பலரை இன்று நம்மவர் சமூகத்தில் சாதாரணமாகக் காணலாம். கந்தபுராணம் பற்றிக் கேட்டும் படித்தும் அறிந்த பின் அதனைப் படிக்க விரும்புபவர்களுக்கு அரியவரப் பிரசாதம் என்று கழிழத்தக்க முறையில் சைவத் திருவாளர் மறவன்புலவு மு. கணபதிப்பிள்ளையவர்கள் கந்தபுராண உற்பத்தி காண்டத்தை உரையுடன் வெளியிடுகின்றார்.

சைவ அறிஞர் உலகத்தால் மதிக்கப்பெற்றவரும், தமிழ், சமக்கிருதம், சோடம் ஆகிய மற்றும் நிரம்பிய அறிவுடையவருமான பருத்தித்துறை உரையாசிரியர் பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரியவர்களின் உரையுடன் இவ்வுற்பத்தி காண்டம் வெளிவருவதை வாழ்ப்பாணத்தில் கந்தபுராண மறுமலர்ச்சியடையவதற்கான காலகோள் முயற்சி என்றே கருணிக்கலாம்.

பலரின் தேவையை நிறைவு செய்வதாயும், பலருக்குக் கந்தபுராணப் பயிற்சியைத் தூண்டத்தக்கவகையிலும் இன்றைய சூழ்நிலையில், கந்தபுராண உற்பத்தி காண்டத்தை வெளியிடுவதைவிடு சமானநீதவான் கணபதிப்பிள்ளையவர்கள் வாக்கில் பாராட்டுவதாயின் காலத்திருந்து செய்த உதவியே இது என்று சொல்லலாம்.

தி. பொன்னம்பலவாணர்

கிறுதுகூடுப்பிரகரம் ஒன்றை வெளியிட முயலுபவர்களையே ஆரவாரப்படுகின்ற-ஆரவாரப்படவேண்டிய காலகட்டத்தில், அமைதியாக இப்பணியைச் செய்திருப்பதன் உண்மைக் காரணம் இவருக்கு இத்தகைய நற்பணிகளில் ஏற்கனவே உள்ள அனுபவமும் ஆர்வமுமேயாகும்.

பாயிரம் உட்பட 83 படலங்களைக்கொண்ட இந்நூல் விலை 125 ரூபா என்றதும் சாதாரணமானவர்களுக்கு மலைப்பு ஏற்படுவது இயல்பே. ஆராய்ந்து பார்த்தால் நியாயமான முதலீடு (5ம் பார்க்கபக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதை வஸ்துக் கடத்தல் ஜெர்மன் பிரஜை கைது

(மன்னார்)

தலைமன்னார் - ராமேஸ்வரக் கப்பல் மார்க்கமாக 1900 கிரேம் ஹசீஸ் போதைவஸ்துக் கடத்திவந்த ஜெர்மன் நாட்டைச்சேர்ந்த பிரயாணி ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

இப் பிரயாணியின் பொதியினைச் சோதனையிட்ட தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் ஹசீஸ் போதை வஸ்துக்களைக் கைப்பற்றினார்.

இத்துடன் தலைமன்னார் துறைமுகப் பகுதியில் 8210 கிரேம் கஞ்சாவையும் கைப்பற்றிய தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் சந்தேகத்தின்பேரில் இருவரை கைதுசெய்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் ஒருவரிடமிருந்து 3,750 கிரேம் கஞ்சாவும் மற்றவரிடமிருந்து 4500 கிரேம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. (செ)

மாணவர் கல்வியுடன் ஒழுக்கத்தை கற்கவேண்டும்"

(கண்டிக்குளி)

"மாணவர்கள் சிறுவயதிலே கல்வியுடன் ஒழுக்கத்தையும் கற்கவேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் ஒழுக்க மானவர்களாக வரலாம்"

இவ்வாறு யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் யாழ் செண்ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய சிறுவர்களின் விளையாட்டுப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபர் சந். சரோதரி எம். வேர்ஜினி தலைமையில் நடந்த இப் போட்டியில் திரு. சிவநாதன் மேலும் கூறியதாவது; "கன்னியர்மடங்களின் பாடசாலைகளில் ஒழுங்கு கட்டுப்பாடுகள் இருப்பது யாரும் மறுக்க முடியாதது. அதை மற்றவர்களும் கைப்பிடித்து இச் சிறுபிள்ளைகளுக்கு இந்த வழிகாட்டுவதையும் கற்பிக்க வேண்டும். சிறுவயதில் விளையாட்டு, கல்வி முதலியவற்றில் அவர்கள் ஆர்வம் காட்டுவதுடன் எதிர்காலமும் அவர்களுக்கு சிறந்ததாக அமையவேண்டும்" என்றார்.

இப்போட்டி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

செய்திச் சிதறல்

நமது நிருபர்கள்

100 பேர் கைது

(கிளிநொச்சி)

சட்டவிரோத வடிசாராயம், சாராயம் முதலியவற்றை விற்பனவு செய்துவந்த சுமார் 100 பேரை கிளிநொச்சி பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி வி. ஏ சுந்தரராசா தலைமையில் சென்ற பொலிஸ் சோஷ்டியினர் கைதுசெய்தனர்.

வவுனியா, இராமநாதபுரம், தர்மபுரம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் பெரும் தொகையானோர் சட்டவிரோதமான முறையில்வடிசாராயம் உற்பத்திசெய்து விற்பனை செய்வதாகவும், உத்தரவு பெறாக் சாராயம் விற்பதாகவும் கிடைக்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து கிளிநொச்சி பொலிசார் பிரஸ்தாப இடங்களுக்கு சென்று சுமார் 100 பேரைக் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் நீதவான் கே. கதிரவேற்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்தனர்

இவர்கள் அனைவருக்கும் அபராதத்தொகை விதிக்கப்பட்டது.

கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாக பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இந்தக் கட்டாக்காலி நாய்களினால் மக்கள் நிம்மதியாக வீதியால் செல்ல முடியாது இருக்கிறது. யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக அதிகாரிகள் இதுபற்றி கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (கி)

ஓடு பிரித்து திருட்டு

(மன்னார்)

மன்னாரிலுள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் ஓடு பிரித்து உட்புகுந்த திருடர்கள் 10 ஆயிரத்து 615 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச்சென்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற இத் திருட்டுச் சம்பவத்தின்போது வானொலிப் பெட்டிகள், கடிகாரங்கள் என்பனவையே திருடப்பட்டனவாகும்.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு பொன் கருணேந்திரன் தலைமையான பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (கி)

கஞ்சா கடத்தல் முறியடிப்பு

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகப் பகுதியிலிருந்து இ. போ. ச பஸ்மூலம் அனுராதபுரத்திற்குக் கடத்திச் செல்லப்பட்ட பெருந்திரளான சோளா கஞ்சாவை தலைமன்னார் பொலிசார் கைப்பற்றினர்.

கடந்த வெள்ளிக்கிழமை கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றினையடுத்து தலைமன்னார் துறைமுகத்திலிருந்து அனுராதபுரத்திற்குச்சென்ற இ. போ. ச. பஸ் ஒன்றைத் துரத்திச்சென்ற தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் தலைமையான பொலிசார் 2-ம் கண்டியில் வைத்து சோதனையிட்டனர்.

இவ்வாறு சோதனையிடும்போதே அனுராதபுரத்திற்குக் கடத்திச்செல்லப்பட்ட பெருந் தொகையான சோளா கஞ்சா கைப்பற்றப்பட்டது. (கு)

துப்பாக்கி

(மன்னார்)

இளைஞர்தின விழாவை முன்னிட்டு தலைமன்னார்துறை இளைஞர் கழகத்திற்குத் தலைமன்னார் துறை பகுதி சுற்றாடல் கிராம நாணயம்மூலம் துப்பாக்கி செய்யப்பட்டது.

தலைமன்னார்துறை இளைஞர் கழகத் தலைவர் ஜனாப் பி.எம். ரபீக், தலைமன்னார்துறை சர்வோதய தலைவர் திரு. எம். சண்முகம் ஆகியோர் தலைமையில் கிராமவாசப்பணியில் பல இளைஞர்கள் வந்து சேர்ந்தனர்.

60வயதுக்குபின் சேவைசெய்ய ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம்!

(கொழும்பு)

60 வயதிற்கு மேல் சேவை செய்ய விரும்பும் தமிழ் ஆசிரியர்கள் வெளிநாட்டுப்பகுதி பாடசாலைகளில் சேவைசெய்ய முன்வந்தால் அவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வேதனம் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு. எம். எஸ் செல்லச்சாமி, செயலாளர் திரு. க. சிவஞானசுந்தரம் ஆகியோர் அண்மையில் கல்வி அமைச்சரை சந்தித்து பேசிய போது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

அதற்கு இணக்கம் காணப்பட்ட ஏனைய முடிவுகள் வருமாறு: பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் இடமாற்றம் யாவும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. உண்மையாக பாதிக்கப்பட்ட சில ஆசிரியர்களுக்கு இந்த இடமாற்றங்கள் கிடைக்காததிலுமே இது தற்போது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தாங்கள் பாதிக்கப்பட்டதற்கான விரிவான அறிக்கைகளை சமர்ப்பித்தால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்.

மலைநாட்டு பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் இடவசதியின்றி கஷ்டப்படும் பட்சத்தில் அவர்களுக்கு அதேபாடசாலையில் தங்குவதற்கான வசதிசெய்து கொடுக்கப்படும். சம்பந்தப்பட்ட கல்வித்திணைக்களங்களுக்கு பணிக்கப்படுகிறது. பாடசாலைகள் இரண்டு ஏக்கர் காணி இல்லாத இடத்தில் அமைந்திருப்பது சுவீகரிப்பது. (கு)

வீடமைப்புக்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தனக்கு தேவையான பிரதிகளின் எண்ணிக்கையைப்பெற்றுக்கொண்டதன் ஒருவர் வீடமைப்புக் கடனுக்கு விண்ணப்பிக்கத்தகைமையுடையவராவார், ஆனால் அவர் குறைந்தது ஒரு வருடத்திற்கு பங்குதாரராக இருக்கக் வேண்டும்

நிரந்தரமான வட்டி வீதத்துடன் இக்கடனைப்பெறமுடியும். ஒருவர் நீண்ட காலத்திற்குப் பங்குதாரராக இருந்தால் விசேட சலுகைகளுடன் கடனைப்பெற முடியும்.

வீ. அ நி. கூ வழங்கும் கடனை முற்றாகத் திருப்பிச் செலுத்தும்வரைக்கும் முதலாவது தங்களுக்குக் கொடுக்கும்படி அவர்கள் கேட்பர்.

வீ. அ நி. கூ. சிறப்பாக அண்மையில் தொழிலில் ஈடுபட்டு தங்கள் எதிர்காலத்தை திட்டமிட எண்ணும் இளைஞர்களை மனதில் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது இவர்கள் திருமணமாகி வாழ்க்கையில் ஈடுபடும்போது அவர்களுக்கென வீட்டைச் சொந்தமாக வைத்திருப்பார்கள்.

பெற்றோர் தங்களது பிள்ளையினுடைய வாழ்க்கையை வழிமுடையதாக்குவதற்கு அவனுக்கு (அல்லது அவளுக்கு ஒரு வீட்டைக் கொடுப்பதற்கு விரும்பும் கொள்வது இயற்கையே. வீ.அ நி.கூ. வசதியான தங்கள் அடிப்படையில் பிள்ளையின் பெயரில் பங்குகளை வாங்குவதன் மூலம் அவனுக்கு அல்லது அவளுக்கு சொந்தமாக வீடு தேவைப்படும் வேளையில் வீட்டுப் பிரச்சினை என்ற ஒன்றை அவன் அல்லது அவள் தவிர்ப்பதை உறுதிப்படுத்தலாம்.

இக்கடன் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு அல்லது வீடொன்றை அறுதியாக வாங்குவதற்கு கட்டுமே வழங்கப்படும்

காணி வாங்குவதற்கு கடன் வழங்கும் நோக்கம் இல்லை இது பற்றிய விபரங்களைச் சுவடிக்குளியிலுள்ள, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மாவட்ட முகாமையாளருடன் பொதுமக்கள் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

உல்லாச...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காணத்தொடங்கியது இதனை நிறுத்த அரசுக்கேற்ற முயற்சிகளிலும் முயன்றுவருகிறது. ஏராளமான செலவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு உல்லாசப் பயணிகளின்வருகையை சாஜநிலைக்கு திருப்புமா என்பது காலதேவனுக்குத்தான் வெளிச்சமானது உல்லாசப்பயணிகளை வரத்திருவதற்காக மாநாடு நடைபெறும் இவ் வேளையில் நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீண்டும் மக்கள் தோன்றியுள்ளது. இதுவரை இலங்கை என்று சிங்களத்திலும் பரவிய பிரசாரம் செய்தால் மட்டும் போதாது; உல்லாசப் பயணிகள் நாடு முழுவதும் அச்சமின்றிச் சென்று பார்க்கக்கூடிய ஒரு நிலையை முதலில் ஏற்படுத்தவேண்டும். இல்லை யேல் உல்லாசப் பிரயாணிகள் தங்கி விடப்படும் யாழ்ப்பாண நிலையத்து ஹோட்டல்களில் [illegible]

கந்த புராண உற்பத்திகாண்டம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யும், நிலைத்த-நீடித்த பயனைத் தரத்தக்கதுமான இந்நூலுக்கு இந்த விலை அதிகமானதல்ல என்பதைப் புரிந்துகொள்ளலாம் சுண்டைக்காய் காற்பணம் சுமையகலி முக்காற்பணம் என்றாற்போல் இக்காலக் காகித விலை, அச்சுக்கூலி என்பவற்றால் இந்நூலுக்கு 125 ரூபா தேவைப்பட்டதேயன்றி இக் காலத்தில் இந்தவகை விலை வல்ல ஒருவரை உரைவெழுதச்செய்து அவரது முயற்சிக்கும் வேண்டிய பணம் கொடுத்து இந்தமாதிரியொரு நூலை வெளியிட்டால் இப்படியான ஒரு நூலுக்கு இதைப் போல் இரண்டு மூன்றுமடங்கு அதிக பணம் தேவைப்படும் என்பது உண்மை.

இந்நூலில் (இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர், அமரர் க. கணபதிப்பிள்ளையும் புலவர் என்றழைக்கப்படும் நற்றவச்சோதிநாதக் கவிப் பிரகாசம் அவர்களும் வரைந்துள்ள உரையாசிரியர் வரலாற்றுக் குறிப்புகளுடன், புராணபடன விதி, கச்சியப்பர் சரித்திரம் முதலியன இடம்பெறுவது இந்நூலை மிகவும் பூரணப்படுத்துகின்றது

அச்சிடும் நூல்களின் அவசியமானதானும் விற்க வகையில் நிப்பிரயோசனமே நூல்கள் கடையும் என மதிக்கும் காலகட்டத்தில் வெளியிட முன்வந்த அன்பரோ தொடர்ந்து ஏனைய காண்டங்களையும் வெளியிடவேண்டுமென்று

(8-ம் பக்கம் பார்க்க)

ஒட்டோஸ் லிமிட்.

(AUTOS LIMITED)

190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்தாபனத்தாரின் இரண்டு நாள் ஏலவிற்பனை

★ ஏராளமான கண்ணாடி அலுமாரிகள்
★ சோக்கேஸ்கள்
★ மரத்தளபாடங்கள்
★ தட்டச்சு இயந்திரங்கள்
★ புதிய மின்சார உபகரணங்கள்
★ மின் விசிறிகள்
★ இறக்குமதிசெய்யப்பட்ட டின்னர் செற்
★ உருக்கு அலுமாரிகள்
★ 2 மோட்டார் வான்கள்
★ 1 மோட்டார் சைக்கிள்
★ 1 மோட்டார் கார்

இன்னும் பல தேவைக்கேற்ப புதிய மோட்டார் வான உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள்

இன்னும் விலை மதிப்புள்ள பலவும்

ஏப்ரல் 7-ந் திகதி சனிக்கிழமையும்
ஏப்ரல் 8-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும்
காலை 10-00 மணி தொடக்கம் 1-00 மணி வரையும் நடைபெறும்.

ஏப்ரல் 6-ந் திகதி வெள்ளிக்கிழமை முதல் பொருட்களை பார்வையிடலாம்.

விற்பனைக்குரிய நிபந்தனைகள்

1. கேள்வித்தொகையில் பெறுமதியில் 25% உடனே காசாக செலுத்தப்பட வேண்டும்.
2. மிகுதித் தொகை விற்பனை முடிந்ததும் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும்.
3. காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும் விபரங்கட்கு:

1. முகாமையாளர்: திரு. வே. தியாகராஜா
அவர்கள்
(Tel No. 12496)
அல்லது
2. ஏல விற்பனையாளர்:
திரு. கே. வி. பாலகிருஷ்ணன்,
692, மே. கே. ஆஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(1704)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியை ஈடுவைக்க

மனைவிமறுத்ததால் கணவன் தற்கொலை

(கிளிநொச்சி நிருபர்)

மனைவி காணியை ஈடுவைத்தற்கு மறுத்ததால் மனமுடைந்து விரக்தியுற்ற கணவன் விஷமருந்தி மரணமானார்.

உருத்திரபுரத்தில் வசித்து வந்த தம்பிமுத்து சுப்பிரமணியம் என்பவரே மரணமானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி முருகேசு பேரம்பலம் மேற்கொண்டார்.

பிரேதபரிசோதனையை சட்டவைத்திய அதிகாரி பி. நவரத்தினராசா நடத்தினார்.

மரணமானவரின் மனைவி சு. கனகரீமா மகன் சு. கனகராசா ஆகியோரும் சாக்கிய மவித்தனைத் தொடர்ந்து தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

"மாணவ சமுதாயத்துக்கு கஷ்டமான ஒரு சூழ்நிலை"

வட்டாரக்கல்வி அதிகாரி கவலை

(பண்டத்தரிப்பு)

"விளையாட்டுப் போட்டிகளில் மாணவரிடையே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு பெரிதும் உதவுகின்றன. வெற்றிகளையும் தோல்விகளையும் சமமாக மதித்து எதையும் தாங்கிக் கொள்ளும் மன உறுதியை விளையாட்டுப் போட்டிகளிலிருந்து எமது இளம் சந்ததி பெற்றுக் கொள்ள முடியும்"

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இறுதி மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திருமதி கனகவல்லி குறமுகராசன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. சண்முகராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இன்றைய மாணவ சமுதாயம் மிகவும் கஷ்டமான தொரு சூழ்நிலையில் தங்கள் கல்வியை தொடர வேண்டியுள்ளது. பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கல்வி என்றும் பாடசாலை முடிவடைந்தவுடன் (ரியூட்டரி) தனிப்பட்ட கல்வி என்றும் ஓய்வு எதுவுமின்றி முழுநாளும் கற்க வேண்டிய தொரு சூழ்நிலையில் இருந்து வருகின்றதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. இதனால் அவர்களின் உடல் நலத்தில் அக்கறை செலுத்தவும் அதை நினைத்துப் பார்க்கவும் நேரவசதி கிடைக்க வழியில்லாது போய்விடுகின்றது. இந்நிலையில் இதுபோன்ற உடற்பயிற்சிக்கு விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களுக்கு மிகவும் அவசியமாகும். அத்துடன் வெறும் ஏட்டுக்கல்வியினால் மாத்திரம் பூரணமானதொரு கல்வியைப் பெறமுடியாது விளையாட்டுப் போட்டிகளில் கடுபடுவதன்மூலம் மாணவர்கள் குறைகளையும் திறமைகளையும் நன்கு வெளிப்படுத்த முடியும்" இக்கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலைமகள் இல்லம் 162 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் பெற்று வெற்றியீட்டியது கிருபா இல்லம் 140 புள்ளிகளைப்பெற்ற இரண்டாமிடத்தையும் புனிதரோ இல்லம் 126 புள்ளிகளைப்பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன. வட்டாரக் கல்வி அதிகாரி பி. சண்முகராசா வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

குளத்தில் மூழ்கி குழந்தை மரணம்

(மன்னார்)

சிறுவர்கள் குழந்தையொன்றை குளக்கரையில் இருக்க வைத்துவிட்டு விளையாடிக் கொண்டிருக்கையில் குழந்தை தவழ்ந்து சென்று குளத்தில் வீழ்ந்து மரணமாகியது.

இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த பரிசாரு என்ற ஒன்றரை வயதுப் பெண் குழந்தையே இவ்வாறு மரணமாகியது.

இம்மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி ஜூரர் எச். எம். முகமது நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட மரணமென தீர்ப்பளித்தார். (சு)

யாருடையது?

யாழ். ஸ்ரான்லி ரோட்டைச் சேர்ந்த திரு. கே. சுதர்சன் என்பவர் பெரியவிளானைச் சேர்ந்த திரு. அருளப்பு ருவுனு செல்வராசாவின் அடையாள அட்டையையும், சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. எம். ஏ. பேரானந்தம் என்பவர் யாழ்-சாவகச்சேரி பஸ்ஸில் கண்டெடுத்த வலை பிளாஸ்ரிக் ரோலையும் சமநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்துபெற்றுக் கொள்ளவும்.

வீதிபுனரமைப்பு: ரூ 2கோடி மதிப்பீடு

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்ட வீதிகளை புனரமைக்க இரண்டு கோடி ரூபாய் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

அண்மைய வெள்ளத்தினால் இப்பகுதி வீதிகளில் பெரும் பாலானவை பாதிப்புக்குள்ளாகியுள்ளது குறிப்பிடத்தக்கது

முல்லைத்தீவு- பாரதிபுரம் வீதியும் பாதிக்கப்பட்டுள்ளதினால் யாழ் பஸ்சேவை மாங்குளம் ஊடாக நடைபெறுகின்றது

நாவாறு பாலம் உடைந்திருப்பதினால் முல்லைத்தீவு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிக்கு நேரடியாக பிரயாணம் செய்ய முடியாதுள்ளது. ஆனம்பிக் வீதியும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. வவுனியா- முல்லைத்தீவு வீதியும் குறிப்பிடத்தக்க அளவு பாதிக்கப்பட்டுள்ளது

வீதிகள் சேதமடைந்துள்ளதினால் மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

மண்ணெண்ணெய் தட்டுப்பாடு

(சுழிபுரம்)

மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இப்பகுதியிலுள்ள விவசாயிகள் தமது தோட்டங்களுக்கு நீர்இறைக்க முடியாது பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் பத்து ரூபாவரை சில கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

இலட்சார்ச்சனை

(சுழிபுரம்)

சுழிபுரம் பருவாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் இலட்சார்ச்சனை இன்று தங்கட்கிழமை தொடக்கம் ஆறு தினங்கள் நடைபெறவுள்ளது தினமும் ஆறு சிவாச்சாரியார்களால் அர்ச்சித்து வழிபாடு நடைபெறும்.

மூன்று வேளையும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் காலை அபிஷேக பூசை, நண்பகல் சண்முக அர்ச்சனை, இரவு பத்திர பூசை, சண்முக அர்ச்சனை ஆகிய பூசைகள் நடைபெறும் வருடா வருடம் இலட்சார்ச்சனையை கொட்டி சந்தானுபூதி மனனப்போட்டி 'நிலையக் குரல் ஆதரவில் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது

தடாகப் பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சிரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான தடாகப் பிரதிஷ்டை இம் மாதம் 28ம் திகதி நடைபெறவுள்ளது.

இதனையொட்டி அன்று அதிகாலை கணபதி பிரார்த்தனை, மூலமூர்த்தி அபிஷேகம், அடியார்களுக்கு கங்காதீர்த்தம் வழங்கல், ஆசீர்வாதம் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன

வலிவடக்கில் கிராமோதயசபைத் தலைவர்கள் தெரிவு

(பண்டத்தரிப்பு)

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபைகளின் தலைவர் தெரிவு இன்று சனி நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகின்றது பிரிவினைக்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்வதற்கு தற்போது வாழ் மரவடிப்பகுதியில் பெரும்பான்மையான கிராமோதய சபைகளின் உறுப்பினர்கள் பதவி இழந்துள்ளார்கள் மேற்படி புதிய கிராமோதய சபைகளின் தலைவர் தெரிவிற்குரிய கூட்டங்களில் உரிமையை பெற்ற உறுப்பினர்கள் பிரிவினைக்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும்.

இன்றைய பலன்

கலி வருஷம் 20-ம் திகதி (8—4—84) திங்கட்கிழமை

மேடம்: செலவில் தாராளம் வேண்டுமென்பீர்கள், சிந்தனைக் கண்களை தாராளமாக சிறிதளவும் கோபத்தை அடக்க முடியாமல் திண்டாடுவீர்கள்.

இடபம்: இன்னலில் பின்னல் சேர்வைத்தரவாக, எற்றதனால் பலன் இன்றிவிடக்கூடும், நுட்பமான வேலைகளில் இன்று ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள், கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் குவியும்.

மிதுனம்: மனையில் பூசல்கள் தோன்றிமறையும், தனி வழிப் பயணத்தை தவிர்த்துக்கொள்ளவும், நண்பர்கள் சூழ்ச்சியை விரிப்பார்கள், இதனால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்வீர்.

கடகம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமான விருந்து கிடைக்கும், ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும், குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும், புதிய வாகனம் கொள்வனவு செய்வீர்கள்

சிங்கம்: வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளமாகும், புத்திர வழியால் புகழும் கிடைக்கும், புதிய பாதையில் நடைபோடுவீர்கள், நண்பர்களிடமிருந்து வரவேற்புக்கிடைக்கும், செல்வாக்குப் பெருகும்.

கன்னி: குடும்ப பிரச்சனைக்கும் இடமுண்டு, எதிலும் அனுதாபம்வேண்டும், வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளத் தரவாக, எண்ணத்தில் தாராளமாக நெஞ்சம் புண்ணாகும், பொறுமை நன்று.

துலாம்: உறவு முறைகள் பலப்படும் உற்சாகம்பெருகும், புதிய நண்பர்கள் துடைகூடுவார், வாழ்த்துக் உண்டு

விருச்சிகம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும், உற்சாகமாக கடமையாற்றுவீர்கள் உலகை சேரும்.

தனுசு: விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும் எதிர்பாராத கடன் கிடைக்கும், சிலருக்கு அரசினர் ஆதரவும் உண்டு

மகரம்: பல வழிகளில் பணம் செலவாகும், நண்பர்கள் சகவாசத்தால் இக்கலில் மாட்டிக் மாட்டிக்கொள்வீர்கள், நடு நிலைமை நன்று

கும்பம்: குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும், மனதில் அமைதிகுன்றும், விஷமிகளின் புகைத்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும்.

மீனம்: பணமுடக்கம்தீரும், பத்திரங்களின் தொடர்பு பெருகும், குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை தென்படும்.

சோதிடக் கலாநிதி
திருமலை வே. ரவீந்திரன்

"பாடசாலைகள் வளர சமுதாயமும் வளர்கிறது"

(மானிப்பாய்)

"பாடசாலைகள் நாவும் மக்களின் சொத்து, எதிர்கால சந்ததியினரின் பெருநன்மை கருதியே பாடசாலைகள் நடத்தப்படுகின்றன இதனை நன்கு உணர்ந்து பாடசாலைகளின் தேவைகளை அவ்வப்போது கண்டு கேட்டு அறிந்து பாடசாலைகளின் நல்வளர்ச்சிக்கு பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எல்லோரும் நற்பணிபுரிய முன்வர வேண்டும். பாடசாலைகள் வளர்ச்சியடையும்போது சமுதாயம் வளர்ச்சியடைகிறது எனக்கருதவாம்"

இவ்வாறு இணுவில் அமெரிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப்பேசிய அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் தமது தலைமை உரையில் கூறினார்.

திரு. சோதிப்பெருமாள் மேலும் உரைநிகழ்த்துகையில் பாடசாலை சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் ஆக்கபூர்வமாகச் செயற்படுவதால் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம் என்றார்

பாடசாலை அபிவிருத்திச் சம்பந்தமாக திரு கி. சண்முகலிங்கம், திரு ஆ. மயில்வாகனம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சே. சோதிப்பெருமாள், உபதலைவர்கள்: திரு மு. இராசதுரை, திரு ஆ. மயில்வாகனம், செயலாளர்: திரு. தி கி. சண்முகலிங்கம், உபசெயலாளர்: திரு. கு. செல்வரத்னம், பொருளாளர்: திரு ஆ. சிவசிதம்பரம், உப பொருளாளர்: திரு ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், 21 பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

வருடாந்த மகோற்சவம்

(கிளிநொச்சி)

சரித்திரப் பிரசித்திபெற்ற இரணமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 6-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

இதுவரையாலும் ஆலய காரிய உற்சவமாக நடைபெற்று வந்த கனகாம்பிகை அம்மன் ஆலயத் திருவிழா முதல் நடவைவாக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அன்றைய தினம் 18-ம் திகதி மாலை வேட்டைத் திருவிழாவும், இரவு சப்பரத் திருவிழாவும் நடைபெறவுள்ளது 14-ம் திகதி தேர் உற்சவமும், 15-ம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும், மாலை பொங்கல் திருவிழாவும், 16-ம் திகதி பூங்காவனத்திருவிழாவும் நடைபெற்று உற்சவம் நிறைவுபெறும்

இதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபைத் தலைவர் செ இராசேந்திரம், செயலாளர் அ பாலசுப்பிரமணியம், பொருளாளர் வை. பரமநாதன் ஆகியோர் சிறப்பான முறையில் மேற்கொண்டுள்ளனர் (கி)

வடு. லயன்ஸ் கழகத்துக்கு நோர்வே நிறுவனம் உதவி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் நிரந்தரக் கட்டிடத்திற்கு நோர்வே நாட்டின் 'நோராட்' நிறுவனம் இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது

இந்தன்சேனி — வட்டுக்கோட்டை பிரதான வீதியில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்திற்கென நிறுவப்படவுள்ள இக்கட்டிடத்திற்கு வலைத் தலைவரும், வட்டு லயன்ஸ் கழகத்தின் சர்வதேசத் தொடர்புக்குப் பொறுப்பானவருமான லயன் இ. விஜயரத்தினம் மேற்கொண்ட முயற்சியினால் மேற்படி நிதிஉதவியை வழங்க 'நோராட்' நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

★

சங்கானையைச் சேர்ந்த 18 வயது யுவதி ஒருவருக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டின் பேரில் புதிய மூன்று சக்கர வாகனி வண்டியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது,

காக்கள் வாதிக்கப்பட்ட மேற்படி யுவதிக்கு பண்டத்தரிப்பில் கடந்த வாரம் நடைபெற்ற வட்டு லயன்ஸ் கழக ஆறுவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தின்போது மேற்படி மூன்று சக்கர வாகனி வழங்கப்பட்டது.

அரச அதிபரிடம் கோரிக்கை

(அரியாலை)

நல்லூர் உதவி அரசாங்க அதிபராகப்பணியாற்றிய திரு. திரு. கே சபாரத்தினம் அவர்களை பூநகரிப்பகுதிக்கு இடமாற்றம் செய்திருப்பதை ரத்துச்செய்யுமாறு அல்லது ஒத்திவைக்கும்படி கோரி அரியாலை மேற்கு வாழ் சனசமூக நிலையம் வாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லி (வசனித்தவர்)
தினசரி 6-00, 8-00, 9-00
மைஹாசன்-சிவக்குமார்
சகலகலாவல்லவன்

ஸ்ரீதர் (வசந்த் நகர்)
தினசரி 6 காட்சிகள்
நீதிதேவன்
விரைவில்
தங்கச் சுரங்கம்

விஜயா (வசந்த் நகர்)
தினசரி 4 காட்சிகள்
கதாநாயகி
வேண்டுகோளுக் கிணங்க
நிறையிடம் பதிக்கிறது.
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி, நாகேஷ்
'அன்பே வா'
(கலர் புதிய பிரதி

இதுவே கடைசி வாரம்
ராஜா (வசந்தநகர்)
தினசரி 10-30, 3-30, 6-00
9-00
கமல்— ஸ்ரீதேவி— தீபா
மீண்டும்கோகிலா
(கலர்)

ஹரன் (வசந்.நகர்)
ஜெய்சங்கர், கதா,
நம்பியார்
சுப்ரபாதம்
(கலர்)
இந்தியாவிலிருந்து
கருவிக்கப்பட்ட புதிய பிரதி

மகத்தான
92வது மகளிர் தினம்
ரீகல் (வசந்.நகர்)
தினசரி 10-30, 3-30, 6-15,
பயணங்கள்
முடிவதில்லை
கடைசி சந்தர்ப்பம்

கடைசி மெ திரைகள்
மட்டும்
ராணி (வசந். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-மாதவி
டிக் டிக் டிக்
(சகலகலா)

விஜேயா (வசந்தநகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிந்தர் - ரூபா
ஒரு தலை ராகம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-15
4-30, 7-00 and 9-15
Steve Mc Queen
in
THE DEER HUNTER
(Color)

சாந்தி (வசந் நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
The Germans Planned
A Spectacular Match
The Prisoners Planned
A Spectacular Escape
MICHAEL CAINE
PELE (world famous
soccer player)
in
Escape to
Victory
Scope-Action-Thrill-Color
அதிரடிக்கு தக்க சிறந
யுடன்பயணம் காணத்
தவறாதீர்கள்!

பொலிஸ்-ஊர்காவல்படை ரோந்து

கிராமப்புறகுற்றச் செயல்களை தடுக்க உதவும்

பொலிஸ் பொறுப்பதிகாரி கூறுகிறார்

(மன்னார்)

"பொலிசாரும், ஊர்காவல் படையினரும் சேர்ந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் கிராமமட்டத்தில் இடம்பெறும் களவு, கொள்ளை, மதுபான விற்பனவு போன்ற சட்ட விரோதச் செயல்களைத் தடைசெய்யமுடியும்"

இவ்வாறு எருக்கலம்பிட்டி ஊர்காவல்படையினருக்கு மத்தியில் உரையாற்றிய மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுனேந்திரன் தெரிவித்தார்.

இவ்வைபவம் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தமதுரையில் கூறியதாவது:

"ஊர்காவல்படையினர் கிராமமக்களிடையே ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் வளர்த்து கிராமத்தில் பொருளாதாரத்தை அபிவிருத்திக்கிடையச் செய்யவேண்டும்.

"கிராமமக்களிடையே நல்லொழுக்கமும், மதப்பற்றும் வளர்ச்சியடைய ஊர்காவல் படையினர் உதவவேண்டும்" என்றார். (வெ)

நீரிழிவு கைநூல்

(பண்டிதரிப்பு)

வட்டுக்கோட்டை வெல்லிழமும் பொதுமக்களினதும் சமரோக நோயாளரினதும் நலன் கருதி 'நீரிழிவு கைநூல்' எனும் நூல் வெளியிட்டுள்ளது.

மிகவும் பயனுள்ள இந்த நூலைபெற விரும்புபவர்கள் சங்கானையிலுள்ள வட்டுக்கோட்டை வெல்லிழமத்தலைவர் டாக்டர் எஸ். நாகநாதருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (கு)

மென்பந்து கிரிக்கெட் ஊக்குவிக்கப்படும்

விளையாட்டு அமைச்சு நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மென்பந்து கிரிக்கெட் விளையாட்டை மேலும் ஊக்குவிக்க விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி விளையாட்டை ஊக்குவித்து வளர்க்கும் நோக்குடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுச் சங்கங்களை ஆரம்பிக்குமாறு விளையாட்டுத்துறை அமைச்சு கோரியுள்ளது

அத்தடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மென்பந்து கிரிக்கெட்போட்டிகளை நடத்த விளையாட்டு உபகரணங்களையும், 500 ரூபா மானியத்தையும் வழங்க அமைச்சு முன்வந்துள்ளது.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்படி சங்கத்தை அமைத்து மேற்படி விளையாட்டை ஊக்குவிக்கும் ஏற்பாடுகளை வலி வடக்கு விளையாட்டுத்துறை அதிகாரி திரு ஏ. முருகையா மேற்கொண்டுள்ளார்.

கி. அபி. சங்கங்கள் புனரமைக்கப்படும்

(நமது சிறுபர் அ. சிறீகாந்நாதன்)

நாடெங்கிலுமுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றை புதிய உபவிதிகளின்கீழ் புனரமைப்புச் செய்யுமாறு கிராம அபிவிருத்தி அமைச்சு சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் சுற்றறிநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இச்சுற்றறிநிருபத்தில் கிராமோதய, பிரதேசசபைகளில் தலைவர்களாக இருக்கும் சங்கங்களைத் தவிர்ந்த ஏனைய சங்கங்களே புனரமைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ் மாவட்டத்தில் கிராமோதய, பிரதேசசபைகள் இல்லாமல் இருப்பதனால் சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

புதிய உபவிதிகள் தனிச்சுற்றறிக்கையாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் வாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கஷ்டப்படுகின்றனர். தமிழ் மொழிபெயர்ப்பு அனுப்பிவைக்கப்படும் என்று குறிப்பிட்டு இருந்தும் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை.

உலக இந்து

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்கான செலவுகளை பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள பணவசதி படைத்த இலங்கையர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள மேற்கூறிய இடம்பெற்றன.

உற்சவ வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டதும், இலங்கையில் அதிகூடியவர்களான நவீன வைத்திய வசதிகளைக் கொண்ட தனியார் வைத்திய சாலையாக அது விளங்கும்

சர்வதேச இந்து இளைஞர் சங்கம் அண்மையில் இடம் பெற்ற கலவரங்களில் சேதமாக்கப்பட்ட இந்து ஆலயங்களையும் புனரமைப்புச்செய்யும் இது சம்பந்தமான மதிப்பீடுகளை நடத்துவருகின்றன. மதிப்பீடுகள் முடிவுற்றதும் புனரமைப்புக்கான பணத்தை உலகில் பலபாகங்களிலுமுள்ள இந்துக்கள் வழங்கமுன்வந்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் இந்துமத மாநாடொன்று நடைபெறவுள்ளது. அம்மாநாட்டிலும் ச. இ. இ சங்கம் அதன் பணிகளுக்கான உதவிகளைக்கோரும்.

சர்வதேச இந்து இளைஞர் சங்கத்தில் உறுப்பினர்களில் ஒருவரான திரு. என். குமரகுருபரன் மேற்கூறிய தகவல்களை வெளியிட்டுள்ளார்.

—அனந்த்

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(சாவகச்சேரி)

புத்தூர் மணற்பகுதி விளையாட்டுக்கழகம் நடத்தும் 21வது உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இம்மாதம் 10ம் திகதி நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் கழகங்களுக்கு முறையே முதலாவதுகழகத்திற்கு ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும், இரண்டாவது கழகத்திற்கு சுற்றுக் கேடயமும், மூன்றாவது கழகத்திற்கு வெள்ளி விழா கிண்ணமும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளும் கழகங்கள் தமதுகொள்ளளவுடன் [illegible] கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ரோகிணி (வசந் நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
நாடோடி

அடிக்கல் நாட்டுவிழா

(வாழ்ப்பாணம்)

இருபாலை ஐக்கிய சனசமூக நிலையத்தின் அடிக்கல் நாட்டு விழா இம்மாதம் 5-ம் திகதி காலை ஆசிரியர் க. நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிலையத்திற்கான அடிக்கல்லை தொழிலதிபர் திரு க. கனகராசா நாட்டி வைப்பார்.

நுபவாஹினியில் இன்று

நேரம்

6-00: நாட்டுவளம் (சிங்களம்)

6-05: சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)

6-30: விளையாட்டுப்பயிற்சி.

6-55: செய்திகள் (தமிழ்)

7-15: கலை அரங்கம்

7-45: "பட்டி விராரலெக்நிர"-தொலைக்காட்சி தொடர்சி திரம் (ஆங்கிலம்)

8 15: செய்திகள் [சிங்களம்]

8-35: "பக்கி ஸ்ரார்] தொடர்ச்சி

9-05: சிங்கள நிகழ்ச்சி

9-30: செய்திகள் (ஆங்கிலம்

10-00 "சார்விஸ் ஏஞ்சல்ஸ்"-துப்பறியும் தொடர் (ஆங்கிலம்)

10-30: உலகச்செய்திக் கண்ணோட்டம்

10-35; "சார்விஸ் ஏஞ்சல்ஸ்"-தொடர்ச்சி

10-55: நிகழ்ச்சி முடிவு

3-ம் வருட நினைவஞ்சலி

திருமதி
தர்மராசா
செல்வராணி

தோற்றம்: 27-04-1947
மறைவு: 02-04-1981

கணவன், பிள்ளைகள்,
மச்சாள்மார்கள்,
மச்சான்மார்கள்,
தந்தை, தாய்,
சகோதரர்கள்.

34, [illegible] வீதி,
[illegible],
யாழ்ப்பாணம்.
(1695)

31ம்- நாள் ஞாபகார்த்த அஞ்சலி

ம. பஸ்தியாம்பிள்ளை

தோற்றம்
15-6-1929

மறைவு
04-03-1984

இளைப்பாறிய வருமான வரி மதிப்பீட்டாளர் திரு. மனுவேல்பிள்ளை பஸ்தியாம்பிள்ளையின் ஆண்ம இளைப்பாறிற்காக 03-04-1984ம் திகதி காலை 6-15 மணிக்கு இளவாலை புனித [illegible] மாதா ஆலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு கொண்டு ஆன்மாவின் ஆண்ம இளைப்பாறிற்காக இறைவனிடம் பிரார்த்திக்கும்படி வேண்டிநிற்கின்றோம்.

அன்புள்ள பிரியமான தமருக்கு
அன்பு மனைவி, மக்கள், உறவினர்.

இளவாலை. 1709

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். விளையாட்டரங்கில்
இராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கை நேற்றுக் காலை இராணுவ அதிகாரிகள் பொறுப்பேற்றனர்.

இதைத் தொடர்ந்து நேற்றுக்காலை பல இராணுவ வாகனங்கள் அரங்குக்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்தன.

யாழ் துரையப்பா விளையாட்டரங்குப் பொறுப்பாளர் திரு. எஸ். கிலலிங்கம், உதவிப் பொறுப்பாளர் திரு. கே. சிவதாசன் ஆகியோரிடம் இருந்து இராணுவத்தினர் விளையாட்டரங்கைப் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் இராணுவ அதிகாரிகள், யாழ் துரையப்பா விளையாட்டரங்கைப் பார்வையிட்டனர். இதைத் தொடர்ந்து நேற்று விளையாட்டரங்கைப் பொறுப்பேற்றனர். இங்கு இராணுவத்தினர் தற்காலிக முகாமிட்டுள்ளனர். (க)

ஒரு நாள் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குரோ 68 ஓட்டங்களை எடுத்தார். அர்ச்சுனா ரணதுங்கா 8 விக்கெட்டுக்களை எடுத்தார். இலங்கை 88 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களை எடுத்தது. ரிச்சார்ட் ஹாட்லி 8 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையே நடைபெற்ற கடைசிப்போட்டி இதுவாகும். நடைபெற்ற 8 ஒரு நாள் போட்டிகளில் நியூஸிலாந்து 2 போட்டிகளிலும் இலங்கை ஒரு போட்டியிலும் வெற்றிபெற்றது. (சு)

கந்தபுராண...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவாவுடன் இருக்கிறார். இவரை உரியமுறையில் ஊக்குவிப்பது சைவ உலகின் பெரும் கடமையாகும்.

'புராணபடனம் தொடர்ந்து நிலைபெறவேண்டும்; சைவ சமய நூல்கள் சைவசமயிகளுக்கு முட்டின்றிக் கிடைத்தல் வேண்டும்' என்றும் இவட் கெத்தில் வரும் இவ்வெளியீட்டை வரவேற்பது எல்லோரதும் பிரதான கடமையாகும்

இன்று
சோவியத் நூல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சோவியத் புத்தகக் கண்காட்சியையும், விற்பனையையும் யாழ் மாநகரசபை மண்டபத்தில் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வீ கே சிவஞானம் இன்று காலை திறந்துவைப்பார்.

பொதுமக்கள் பார்வைக்காக இக்கண்காட்சி இம்மாதம் 4ம் திகதிவரை நடைபெறும். (க)

செல்லப்பா சுவாமிகள் குருபூசை

(நல்லூர்)

நல்லூரில் புதிதாக அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நாளை செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும். சுவாமிகள்பற்றிய நூல் ஒன்றும் வெளியிடப்படும்.

கால்நடை அபிவிருத்தி விளக்கவுரை

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகப் பகுதிக்கு விஜயம்செய்த மன்னார் மாவட்ட கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தலைமன்னார் துறைமுகப் பகுதியைச் சேர்ந்த கால்நடைகளுக்கு தடுப்பூசிகளைப் போட்டதுடன், கால்நடை அபிவிருத்தி பற்றியும் விளக்கவுரையாற்றினார்கள்.

மன்னார்மாவட்ட கால்நடை உத்தியோகத்தர்களான திரு. எஸ் கித்திரவேலு, திரு வி. கே. சோமநாதன் ஆகியோரே தலைமன்னார் துறைமுகப்பகுதிக்கு விஜயம் செய்தனர்

இவர்கள் தலைமன்னார் துறை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அழைப்பின்பேரிலேயே தலைமன்னார் துறைமுகப்பகுதிக்கு விஜயம்செய்தனர்.

பாடசாலை. .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

3 மாத காலம் வகுப்புகளுக்குத் தொடர்ந்து வராத மாணவரின் பெயர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

மண்எண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணெண்ணைக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில கடைகளில் விலையைக் கூட்டி விற்கின்றனர் என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டினால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

		18	E	0608	
10	F	0774	13	F	0292
		13	F	0399	
12	G	0804	15	G	0845
		18	G	0605	
03	H	0500	07	H	0941
05	J	0729	05	J	0953
08	J	0287	09	J	0288
10	J	0055	19	J	0502
05	K	0813	07	K	0840
09	K	0254	14	K	0984
21	K	0833	21	K	0951
02	L	0917	08	L	0004
14	L	0631	18	L	0781
		20	L	0635	
03	M	0446	04	M	0026
		07	M	0775	
09	N	0559	13	N	0358
20	N	0677	04	O	0128
08	O	0004	10	O	0019
13	O	0979	20	O	0028
03	P	0308	05	P	0801
10	P	0978	07	Q	0469
19	Q	0873	01	R	0107
11	R	0656	12	R	0848
12	R	0942	13	R	0003
06	S	0229	07	S	0918
08	T	0832	05	T	0330
06	U	0301	12	U	0148
16	U	0957	11	V	0844
14	V	0741	14	V	0917
03	W	0323	04	W	0097
06	W	0084	08	W	0909
10	W	0658	18	W	0090
19	W	0594	19	W	0627
01	X	0385	08	X	0162
16	X	0067	16	X	0989
07	Y	0081	09	Y	0711
13	Y	0648	19	Y	0845
06	Z	0741	07	Z	0010
11	Z	0416	13	Z	0349

(இலையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

இப்படியும் நடக்கிறது

ஆடம்பரமான ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில், புதிய எட்டட நிர்மாணவேலைகளுக்கான சமயச்சடங்குகள் முறைமுறையாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அமைச்சர்களும், உயர் ஸ்தானிகர்களும் பிறரும், முக்கிய பிரமுகர்களும் அதற்கு பிரசன்னமாகியிருந்தனர்.

பாலைகளில் பால் காய்ச்சப்படுகிறது

'ஓலே' என்று பொங்கவேண்டும் என்று பலரது கண்களும் பாலைகள் மீது பதிந்திருக்கின்றன.

செக்கண்டுகள் நிமிடங்களாகின்றன! ம்.....பால் பொங்கினால் தானே! அதுதான் எப்படியோ பால் வெளியாகிவிட்டது. எப்படி?

ஒருபாலையின் கீழ்ப்பகுதியில் திடீர் வெடிப்பு ஏற்பட்டு பால் வெளியேறியது ஓடிவிட்டது!

○ ○ ○

ஸ்ரீமான் பொதுஜனம், எட்டு வார்த்தைகளில் ஒரு புதிரை அனுப்பியிருக்கிறார்.

புதிர் இதுதான்! "எல்லோரும் ஏறிக்கொண்ட குதிரையில் சட்டைத்தார் ஏறிச்சறுக்கி விழுந்தாராம்".

அர்த்தம் உங்களுக்குத் தெரிந்தால் அனுப்பிவையுங்கள்.

"ஊடுருவி"

விடுமுறை தினத்திலும்
விற்பனை நடந்தது

(யாழ்ப்பாணம்)

நேற்று விடுமுறை தினமாக இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான கடைகள் திறக்கப்பட்டு விலை பாரம் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் பகட்டி நிலையைத் தொடர்ந்து 3 தினங்கள் தொடர்ந்து அதிகமான கடைகள் பூட்டப்பட்டிருந்தன. இதனால் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கமுடியாமற் கஷ்டப்பட்டனர்.

நேற்றுக் கடைகள் திறந்திருந்ததால் பொதுமக்கள் பாவனைப் பொருட்களை வாங்கிக்கொண்டனர் (க)

மைசூர்பருப்பு 'கியூ'

(யாழ்ப்பாணம்)

மைசூர் பருப்பு வாங்குவதற்காக யாழ் சந்திரத்துச் சந்திக்கு அருகிலுள்ள கட்டுறவு மொத்தவிற்பனை நிலையத்தைப் பாவனையாளர்கள் முற்றுகையிட்டனர்

நேற்று விடுமுறை தினமாக இருந்தபோதிலும், மேலிடத்துப்பணியைத் தொடர்ந்து விற்பனைநிலையம் நடைபெற்றது இம்மாதம் 11 ம் தேதி வரை இந்நிலையம் தினமும் திறந்திருக்கும் என்று நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

மைசூர் பருப்பின் விலை கிலோ 18 ரூபாவாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் தினமும் 'கியூ'வில் நின்று மைசூர் பருப்பு வாங்கிச் செல்கின்றனர். ஒருவருக்கு ஒரு கிலோ மைசூர் பருப்பு மட்டுமே இங்கு வழங்கப்படுகிறது மிளகாய், மல்லி, நெத்தலி சீனி ஆகியவற்றையும் வாங்கிச் செல்கிறார்கள். (க)

கணவனின் சுடுசொல்
தாங்காது மனைவி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கவில்லையென்று கணவன் பேசியதால் மனமுடைந்த மனைவி நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த திருமதி வி. அனுசியா (20 வயது) மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல்தெரிய வந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ் பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

கணவன் ஏசியதைத் தொடர்ந்து, தாய் வீட்டில் இருந்துவந்த, தோட்டத்தில் இருந்த நச்சுத்திராவகத்தை எடுத்து குடித்த தாக விசாரணையில் கூறப்பட்டது. விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

வேலைநிறுத்தம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வேலைநிறுத்தத்தினால் இந்தியாவுக்கு பலகோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதினால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படலாமென நம்பப்படுகிறது. (சு)

'பாட்டா' மாநாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளை காலையே ஆரம்பமாகும்.

இம்மாநாட்டில் 82 நாடுகளை சேர்ந்த 1300க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றன. அத்துடன் அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து 90க்கு மேற்பட்ட பத்திரிகையைச் சேர்ந்தவர்களும் கலந்துகொள்கின்றனர். (சு)

மரண அறிவித்தல்

மரியான் பேதுறுப்பிள்ளை (செல்லத்தம்பி)

குருநகரைச் சேர்ந்த மரியான் பேதுறுப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் திரேசம்மாவின் அன்புக் கணவரும், வேதநாயகம் [தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்], மர்த்தினு, பிரான்சிஸ், (இலங்கை வங்கி, சுன்பதிரி வீதி, யாழ்ப்பாணம்), மரியரெட்ணம், அன்ரன், மேரிகிரேஸ், மேபிள் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஆன்றோரின் பூதவுடல் 2-4-84 திங்கட்கிழமை பி. ப. 4-30 மணிக்கு 85 புதிய பீச் ரோட், றொஸ்மேனர், குருநகரிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பரி கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; P. பிரான்சிஸ்

[1713]

மரண அறிவித்தல்

சி. மார்க்கண்டு

பலாலி சிதம்பரி மார்க்கண்டு (1-4-84) ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், சின்னத்துரை, ஐயாத்துரை (கரிமையார் செல்வம் ஸ்டோர்ஸ் பலாலி), தம்பித்துரை, சிவநாதன் (சுந்தரம் மதுபான விற்பனை நிலையம் பலாலி), குகநிதி, பார்க்கவி, அற்புதம், தெய்வானைப்பிள்ளை பூமணி, கண்மணி, ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைசிங்கத்தின் பிரியதகப்பனாரும், இராசமணி, சத்ருஜினிதேவி, புனிதவதி, பிறைசூடி, இரத்தினம், இராசரத்தினம் தவராஜா, சுந்தரவதனி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். இறுதிக்கிரியை 2-4-84 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று தகனத்திற்காக பலாலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் தருபவர்;

மார்க்கண்டு சிவநாதசுந்தரம்

1712

இப்பத்திரிகை "எழுநாடு" லிமிடெட் அதாவதுத்தரர் யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கு வீதி, 66ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ம் திகதி அச்சிடப்பெற்றது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Helanadu-P. O. Box 49. Telegram: Helanadu: Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org